
# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

**பொருளியல் I** | **இரண்டு மணித்தியாலங்கள்**

**கவனிக்குக:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்குக.
* **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**01.** பின்வரும் கூற்றுகளுள் நுண்பாகப் பொருளியல் கோட்பாட்டிற்குப் பொருத்தமான கூற்று எது?
(1) உள்ளீட்டின் விலையதிகரிப்பு விலை மட்டம் உயர்வதற்குக் காரணமாகும்.
(2) மொத்த உற்பத்தியின் வீழ்ச்சி நிறைதொழில் மட்டம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாகும்.
(3) வட்டிவீத வீழ்ச்சி பணத்தின் கேள்வி அதிகரிப்பதற்குக் காரணமாகும்.
(4) பண நிரம்பலின் அதிகரிப்பு வட்டிவீத வீழ்ச்சிக்குக் காரணமாகும்.
(5) எல்லை விளைவின் வீழ்ச்சி எல்லைச் செலவு அதிகரிக்கக் காரணமாகும்.

**02.** குறித்தவொரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சாத்திய எல்லையைக் காட்டும் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




மேலுள்ள உற்பத்தி சாத்திய எல்லை வளைகோட்டிற்குப் பொருத்தமான மிகச் சரியான கூற்றை பின்வரும் விடைகளிலிருந்து தெரிவுசெய்க.
(1) ஒரே இன வளங்கள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(2) உற்பத்தியில் சம அளவான தொழில் நுட்ப முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
(3) ஓரினம் அல்லாத வளங்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(4) வளங்களின் விளைதிறனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
(5) ஒரு தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட வளங்கள் மற்றைய தொழிலிலும் அதே விதத்தில் ஈடுபடுத்தப்பட முடியும்.

**03.** மத்திய திட்டமிடல் பொருளாதாரம் ஒன்றில் விலையின் தொழிற்பாடானது,
(1) என்ன பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை மத்திய திட்டமிடல் குழுவிற்கு வழிகாட்டுதலாகும்.
(2) உற்பத்தியாளர்களுக்கு இலாபம் ஈட்டிக்கொடுப்பதன் மூலம் தூண்டல்களை வழங்குதலாகும்.
(3) அருமையான வளங்களை மாற்றுத் தெரிவுகளுக்கிடையே பங்கீடு செய்தலாகும்.
(4) பொருளாதாரக் கொள்கைகளை திட்டமிடுவதற்கான கருவியாக அமைதலாகும்.
(5) குடித்தனத்துறையினரிடையே காரணி வருமானப் பரம்பலைத் தீர்மானித்தலாகும்.

**04.** "சந்தைப் பொருளாதார முறைமையில் நுகர்வோர் இறைமை காணப்படுகின்றது" என்பதை பின்வரும் எக்காரணி மூலம் விளக்கலாம்?
(1) நுகர்வோருக்குத் தேவையான பண்டங்கள் சந்தை மூலம் வழங்கப்படல்.
(2) நுகர்வோருக்கு அத்தியாவசியப் பண்டங்களை மாத்திரம் வழங்குவதற்கு அரசு வழிகாட்டுதல்.
(3) தமது விருப்பப்படி ஊழியத்தை மாற்றுவதற்கு ஊழியருக்குச் சுதந்திரம் காணப்படல்.
(4) நுகர்வோரைப் பாதுகாக்க அரசு விலைக்கட்டுப்பாட்டை அமுல்படுத்தல்.
(5) இயற்கைத் தனியுரிமை நிலைமையொன்று சந்தையில் காணப்படல்.

[பக். 2 ஐப் பார்க்க

**05.** உற்பத்திச் சாத்திய வளையியில் உள்ள எல்லாப் புள்ளிகளிலும் எதிர்பார்க்கப்படும் நிலைமை,
(1) வளப்பங்கீட்டின் வினைத்திறன் ஆகும். (2) பொருளாதாரத்தின் வினைத்திறன் ஆகும்.
(3) உற்பத்தியின் வினைத்திறன் ஆகும். (4) விலையுறுதித் தன்மை ஆகும்.
(5) உற்பத்திப் பங்கீட்டின் நியாயத்துவம் ஆகும்.

**06.** குறித்த பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வியினளவு குறைவதில் செல்வாக்குச் செலுத்தும் வருமானப் பதிலீட்டு விளைவு
(1) சார்பு விலை குறைந்த பண்டங்களை நுகர்வோர் நாடுதல்
(2) பண்டத்தின் விலை அதிகரிப்பின்போது மெய்வருமானம் அதிகரித்தல்
(3) பண்டத்தில் விலை அதிகரிப்பின்போது மெய்வருமானம் வீழ்ச்சியடைதல்
(4) குறித்த பண்டத்தின் விலை எதிர்காலத்தில் குறையும் என்ற எதிர்பார்ப்பில் கேள்வியைக் குறைத்தல்
(5) பண்டத்தில் விலை அதிகரிப்பின்போது பண வருமானம் குறைந்து கேள்வி குறைவடைதல்

**07.** இருவகைப் பண்டங்களின் விலைமாற்றத்தையும் உற்பத்தியாளரின் வருமான மாற்றத்தையும் காட்டும் அட்டவணை பின்வருமாறு;

| பண்டம் | விலை அதிகரிப்பு | உற்பத்தியாளர் வருமான மாற்றம் |
|---|---|---|
| A | 10% | 5% |
| B | 20% | -10% |


மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி A, B ஆகிய பண்டங்களின் கேள்வியின் விலை நெகிழ்ச்சியை சரியாகக் காட்டும் விடை

| | A பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி | B பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி |
|---|---|---|
| (1) | நெகிழ்ச்சியற்றது | அலகு நெகிழ்ச்சி |
| (2) | அலகு நெகிழ்ச்சி | நெகிழ்ச்சியுள்ளது |
| (3) | நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியுள்ளது |
| (4) | பூரண நெகிழ்ச்சியுள்ளது | பூரண நெகிழ்ச்சியற்றது |
| (5) | நெகிழ்ச்சியுள்ளது | நெகிழ்ச்சியற்றது |

**08.** குறிப்பிட்டவொரு பண்டத்தின் நிரம்பல் சமன்பாடு $Q_S = -30 + 5P$ ஆகும். இங்கு நிரம்பல் நெகிழ்ச்சியின் தன்மை பற்றிய சரியான கூற்றினை பின்வரும் விடைகளிலிருந்து தெரிவுசெய்க.

| | நிரம்பல் நெகிழ்ச்சி | விலை அதிகரிக்கும்போது நெகிழ்ச்சிக் குணகம் மாறும் விதம் |
|---|---|---|
| (1) | ஒன்றை விடக் குறையும் | அதிகரிக்கும் |
| (2) | ஒன்றை விடக் குறையும் | வீழ்ச்சியடையும் |
| (3) | ஒன்றை விடக் கூடும் | வீழ்ச்சியடையும் |
| (4) | ஒன்றை விடக் கூடும் | அதிகரிக்கும் |
| (5) | அலகு நெகிழ்ச்சி | மாற்றமில்லை |

**09.**




மேலுள்ள வரைபடத்தின் படி A புள்ளியில் $S, S_1$ ஆகிய நிரம்பல் வளையிகளின் நிரம்பல் விலை நெகிழ்ச்சிகள் முறையே,
(1) 0.8 உம் 1.2 உம் ஆகும். (2) 0.8 உம் 1.5 உம் ஆகும். (3) 1.0 உம் 0.8 உம் ஆகும்.
(4) 1.25 உம் 0.5 உம் ஆகும். (5) 1.25 உம் 0.8 உம் ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**10.** $Q_d = 30 - 2P$

$Q_s = 14 + 2P$

மேற்காட்டப்பட்ட கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைப் பயன்படுத்தி, நுகர்வோர் மிகையைக் கணிப்பிட்டால் கிடைக்கும் பெறுமதி

(1) ரூ. 18 (2) ரூ. 22 (3) ரூ. 44 (4) ரூ. 121 (5) ரூ. 242

**11.** பின்வருவன ஒரு பண்டத்தின் மிகைக் கேள்விச் சமன்பாடும், நிரம்பல் சமன்பாடும் ஆகும்.

$Q_{ed} = 28 - 7P$


$Q_s = -8 + 6P$

இங்கு சமநிலை விலையும் தொகையும் முறையே

(1) ரூ. 4, 16 அலகுகள் (2) ரூ. 4, 56 அலகுகள் (3) ரூ. 7, 20 அலகுகள்

(4) ரூ. 16, 34 அலகுகள் (5) ரூ. 28, 56 அலகுகள்

**12.** குறிப்பிட்டவொரு பண்டத்துக்கு அலகு வரி விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைக் காட்டும் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.





வரைபடத்தின் படி வரி அறவிடப்பட்டபின், பின்வரும் நிலைமைகளில் எது சரியானது?

| | வரியின் பின் பொருளாதார மிகை | அரச வரி வருமானம் | இழக்கப்படும் சமூக நலச் சேவைகள் |
|---|---|---|---|
| (1) | A + G | B + C + E | D |
| (2) | A + D | B + C | D + F |
| (3) | D + F | B + C + E | D + F |
| (4) | A + G | B + C + E | D + F |
| (5) | G + F | B + C | F |

**13.** குறிப்பிட்ட ஒரு பண்டத்திற்கு அரசு அலகு மானியம் வழங்கிய பின் காணப்பட்ட சந்தை நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

வரைபடத்தின் படி மானியத்தினால் அரசுக்கு ஏற்படும் செலவும் இழக்கப்படும் சமூகநல சேவைகளும் பற்றிய பின்வரும் பெறுமதிகளில் சரியான பெறுமதிகளைக் காட்டும் விடை யாது?


| | மானியத்துக்கான அரச செலவு | இழக்கப்படும் சமூக நலச் சேவைகள் |
|---|---|---|
| (1) | ரூ. 4000 | ரூ.1000 |
| (2) | ரூ. 8000 | ரூ. 500 |
| (3) | ரூ. 4000 | ரூ. 500 |
| (4) | ரூ. 6000 | ரூ.1000 |
| (5) | ரூ. 8000 | ரூ.1000 |





[பக். 4 ஐப் பார்க்க

**14.** குறிப்பிட்டவொரு பண்டத்திற்கு அரசினால் உயர்ந்தபட்ச விலை விதிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.

$P_1$ விலையை விளைதிறனாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைத்தால்,
b யினதும் d இனதும் பெறுமதிகள்,
(1) உற்பத்தி மிகையின் ஒரு பகுதியாகும்.
(2) உற்பத்தி இலாபத்தில் சேர்க்கப்படும்.
(3) நுகர்வோர் மிகையின் ஒரு பகுதியாகும்.
(4) அரச வருமானத்தில் சேர்க்கப்படும்.
(5) உற்பத்தியாளர் இழக்கும் ஒரு பகுதியாகும்.





**15.** குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டில் மாறும் உள்ளீடுகள் அதிகரிக்கும்போது எல்லை விளைவும் சராசரி விளைவும் மாறும் விதம் பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.




மேலுள்ள வரைபடத்தின்படி $L_1$ இலிருந்து $L_2$ ஆக மாறும் உள்ளீடுகளை அதிகரிக்கும்போது குறுங்கால சராசரி மாறும் செலவும் எல்லைச் செலவும் மாற்றமடையும் சரியான விதம் பின்வருவனவற்றுள் எது?

| | சராசரி மாறும் செலவு | எல்லைச் செலவு |
|---|---|---|
| (1) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| (2) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (4) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (5) | அதிகரிக்கும் | நிலையாகக் காணப்படும் |

**16.** பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிறுவனம் தொடர்பாக உங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்றைத் தெரிவுசெய்க.




(1) நிறுவனத்தின் இலாபம் உச்சமடைவது $E_1$ புள்ளிக்குரிய வெளியீட்டு மட்டத்திலாகும்.

(2) E புள்ளிக்குரிய வெளியீட்டு மட்டத்தில் நிறுவனம் பொருளாதார இலாபத்தை உழைக்கிறது.


(3) E புள்ளிக்குரிய வெளியீட்டு மட்டத்தில் நிறுவனம் நட்டமடைகிறது.

(4) நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் கோடு, E புள்ளியிலிருந்து மேல்நோக்கிச் சரியும் எல்லைச் செலவுக் கோடாகும்.

(5) நிறுவனத்தின் குறைந்தபட்ச நிரம்பல் P ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**17.** நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் செலவு, வருமானம் என்பன பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளன.




மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் பண்டத்தை விற்பனை செய்யும் விலை ரூ. 40 எனின், குறுங்கால இலாபத்தை உச்சப்படுத்தும் உற்பத்தி மட்டம், பொருளியல் இலாபம், மொத்த நிலையான செலவு, மொத்த மாறும் செலவு என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடை யாது?

| | இலாபத்தை உச்சப்படுத்தும் உற்பத்தி மட்டம் | பொருளியல் இலாபம் | மொத்த நிலையான செலவு | மொத்த மாறும் செலவு |
|---|---|---|---|---|
| (1) | 15 | 75 | 150 | 500 |
| (2) | 15 | 75 | 150 | 550 |
| (3) | 20 | 100 | 150 | 550 |
| (4) | 20 | 100 | 200 | 450 |
| (5) | 20 | 100 | 200 | 700 |

**18.** பொருளாதாரமொன்றின் வளப் பயன்பாட்டில் உள்ளடக்கப்படுவது,
(1) மொத்த உள்நாட்டுச் செலவும் பொருட்கள் சேவைகளின் இறக்குமதிப் பெறுமதியுமாகும்.
(2) மொத்த உள்நாட்டு உற்பத்தியும் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதியுமாகும்.
(3) நுகர்வுச் செலவும் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதியுமாகும்.
(4) மொத்த உள்நாட்டு உற்பத்தியும் பொருட்கள் சேவைகளின் இறக்குமதிப் பெறுமதியுமாகும்.
(5) மொத்த உள்நாட்டுச் செலவும் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதியுமாகும்.

**19.** குறிப்பிட்டவொரு பொருளாதாரத்தில் இறப்பர் பால் உற்பத்தியின் பெறுமதி 10,000 மில்லியன் ரூபாவாகும். இறப்பர் ஷீட் உற்பத்தியில் புதிதாக கூட்டப்பட்ட பெறுமதி 18,000 மில்லியன் ரூபாவாகும். இவ்வுள்ளீடுகளின் மூலம் இறப்பர் பாதணிகள் உற்பத்தி செய்யப்பட்டால் இவ் அனைத்து உற்பத்திகளின் முழுப் பெறுமதி 72,000 மில்லியன் ரூபாவாகும். எனவே பாதணி உற்பத்திச் செயற்பாட்டின் கூட்டப்பட்ட பெறுமானங்களின் மொத்தம்
(1) 56,000 மில்லியன் ரூபாவாகும்.
(2) 44,000 மில்லியன் ரூபாவாகும்.
(3) 26,000 மில்லியன் ரூபாவாகும்.
(4) 18,000 மில்லியன் ரூபாவாகும்.
(5) 10,000 மில்லியன் ரூபாவாகும்.

**20.** சென்மதி நிலுவை தொடர்பான தரவுகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வர்த்தக மீதி பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களில் | – 9409 |
| சேவைக் கணக்கு மீதி | 1250 |
| வருமானக் கணக்கு மீதி | – 1148 |

தேசிய கணக்குகளில் மேற்கூறப்பட்ட பெறுமதிகள் மூலம் ஏற்படும் பாதிப்பினை சரியாகக் காட்டும் விடை எது?
(1) மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது.
(2) மொத்த உள்நாட்டு செலவை விட மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது.
(3) மொத்த உள்நாட்டுச் செலவை விட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீதான செலவு அதிகரித்துள்ளது.
(4) மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவை விடக் குறைந்துள்ளது.
(5) மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவுக்குச் சமமாகவுள்ளது.


[பக். 6 ஐப் பார்க்க

**21.** மூடிய பொருளாதாரம் ஒன்றின் நுகர்வுச் சார்பு $C = 100 + 0.8Yd$ ஆகும். தன்னிச்சையான வரி 100, அரச மாற்றல் செலவு 80 ஆகியவற்றை அரசு நடைமுறைப்படுத்தினால் அதன் தாக்கத்தை ஒப்பிட்ட பின்னரான நுகர்வுச் சார்பினைச் சரியாகக் காட்டும் விடை எது?

(1) $C = 84 + 0.8Y$ (2) $C = 84 + 0.8Yd$ (3) $C = 104 + 0.8Y$

(4) $C = 116 + 0.8Y$ (5) $C = 120 + 0.8Y$

**22.** மூடிய பொருளாதாரமொன்றின் மொத்த வெளிப்பாய்ச்சல் சார்பு மாற்றமடைந்த விதம் பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.





வெளிப்பாய்ச்சல் சார்பு மாற்றமடைந்த பின்னர் பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவுக் குணகமும் சமநிலை தேசிய வருமானத்தில் ஏற்படும் பாதிப்பும் சரியாகக் காட்டப்படும் விடை எது?

| | தன்னிச்சையான செலவுக் குணகம் | சமநிலைத் தேசிய வருமானம் |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (2) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (4) | அதிகரிக்கும் | மாறாது |
| (5) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |

**23.** எளிய பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டம் நிலையாக இருக்கும்போது மொத்தச் செலவுச் சார்பு மேல்நோக்கி பெயர்ச்சியடைந்த விதம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. இப்பொருளாதாரத்தின் குணகம், $E_1$ மொத்தச் செலவுச் சார்பிற்கமைவான என்பவற்றுக்குரிய புதிய சமநிலை வருமானம் என்பவற்றைக் காட்டும் விடை எது?

| | குணகம் | புதிய சமநிலை வருமானம் |
|---|---|---|
| (1) | 4 | 1300 |
| (2) | 5 | 1600 |
| (3) | 4 | 1600 |
| (4) | 5 | 1700 |
| (5) | 4 | 1500 |




**24.** பொருளாதாரமொன்றில் உச்ச வெளியீட்டு மட்டத்தினைப் பேணுவதற்குத் தேவையான சமநிலைக் கேள்வி $E = 1000 + 0.8Y$ ஆகும். இப்பொருளாதாரத்தின் உண்மை சமநிலைக் கேள்வி $E = 1200 + 0.8Y$ வரை அதிகரிக்குமாயின் ஏற்படும் விளைவு,

(1) மெய் வெளியீடு அதிகரித்து வேலையின்மையில் இடைவெளி ஏற்படும்.
(2) மெய் வெளியீடு வீழ்ச்சியடைந்து வேலையின்மையில் இடைவெளி ஏற்படும்.
(3) மெய் வெளியீடு அதிகரித்து பணவீக்க இடைவெளியொன்று ஏற்படும்.
(4) மெய் வெளியீடு நிலையாக இருக்கும்போது பணவீக்க இடைவெளியொன்று ஏற்படும்.
(5) மெய் வெளியீடு நிலையாக இருக்கும்போது பணச்சுருக்க இடைவெளியொன்று ஏற்படும்.

[பக். 7 ஐப் பார்க்க

**25.** குறிப்பிட்ட பொருளாதாரமொன்றில் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1500 பில்லியன் ரூபா ஆவதுடன் பணச்சுற்றோட்டம் 75 ஆகும். விலை மட்டம் 25 ஆகக் காணப்பட்டால் பண நிரம்பலும் மெய் உற்பத்தியும் முறையே,
(1) 3 உம் 60 உம் ஆகும். (2) 10 உம் 30 உம் ஆகும். (3) 20 உம் 60 உம் ஆகும்.
(4) 30 உம் 375 உம் ஆகும். (5) 60 உம் 375 உம் ஆகும்.

**26.** கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஒன்றிற்கான காரணமாக அமையக் கூடியது,
(1) பண நிரம்பல் குறைவடைதல் ஆகும். (2) அரச செலவீனங்கள் அதிகரித்தல் ஆகும்.
(3) வட்டி வீதங்கள் அதிகரித்தல் ஆகும். (4) வருமான வரி அதிகரிக்கப்படல் ஆகும்.
(5) இறக்குமதி உள்ளீடுகளின் விலை அதிகரித்தல் ஆகும்.

**27.** பாடர் முறை அல்லது பண்டமாற்று முறை வீழ்ச்சியடைவதில் பாதிப்புச் செலுத்திய முக்கிய காரணி
(1) போக்குவரத்தில் ஏற்பட்ட இடர்பாடுகள்
(2) சேமிப்பதில் உள்ள சிக்கல்கள்
(3) சிறிய அலகுகளாகப் பிரிப்பதிலுள்ள சிக்கல்கள்
(4) சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மை இல்லாதிருந்தமை
(5) இரட்டைப் பொருந்துகையில் காணப்பட்ட இடர்பாடுகள்

**28.** பணத்தின் உத்தேச நோக்கக் கேள்விக்கு அடிப்படையான பணத்தின் தொழிற்பாடு எது?
(1) பரிமாற்று ஊடகம் (2) பெறுமானத் திரட்டு
(3) பெறுமானத்தை அளவிடும் அளவுகோள் (4) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்
(5) கணக்கீட்டு அலகு

**29.** பின்வருவனவற்றுள் $M_2b$ பணம் **அல்லாதது** எது?
(1) பொதுமக்களிடம் புலக்கத்தில் உள்ள பணம்
(2) பொதுமக்களின் உரிமம் பெற்ற வணிக வங்கிகளிலுள்ள கேள்வி வைப்புக்கள்
(3) பொதுமக்களின் வணிக வங்கிகளிலுள்ள சேமிப்பு, நிலையான வைப்புக்கள்
(4) வெளிநாட்டு வங்கி அலகுகளில் உள்ள வதிவுள்ளோரின் வைப்புக்கள்
(5) உரிமம் பெற்ற விசேட வங்கிகளில் உள்ள தனியார் வைப்புக்கள்

**30.** குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றின் நிதி தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அனைத்துப் பெறுமதிகளும் பத்து இலட்சம் ரூபாய்களில் ஆகும்.

| | |
|---|---|
| பொதுமக்களின் புழக்கத்தில் உள்ள பணம் | 600 |
| வணிக வங்கிகளில் உள்ள புழக்கப் பணம் | 200 |
| பொதுமக்கள் பெயரிலுள்ள மொத்த வைப்புக்கள் | 1000 |
| சட்டரீதியான ஒதுக்கு வீதம் | 10% |
| வணிக வங்கிகளில் உள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புகள் | 400 |

மேலுள்ள தகவல்களின் படி பொருளாதாரத்தில் பணத்தளம், குறுகிய பண நிரம்பல் அடிப்படையான பணப்பெருக்கி என்பவற்றைக் சரியாக் காட்டும் விடை எது?

| | பணத்தளம் | பணப்பெருக்கி |
|---|---|---|
| (1) | 800 | 1 |
| (2) | 900 | 1.33 |
| (3) | 900 | 1.77 |
| (4) | 1200 | 1.16 |
| (5) | 1800 | 1.33 |

**31.** வணிக வங்கியொன்றின் ஐந்தொகையிலுள்ள சொத்துக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.
A - கையிலுள்ள பணம்
B - திறைசேரி முறிகள்
C - மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம்
D - திறைசேரி உண்டியல்கள்
E - கையிலுள்ள, வெளிநாட்டு வங்கிகளிடம் அறவிட வேண்டிய அந்நியச் செலாவணி

திரவத்தன்மையின் இறங்குவரிசைப்படி மேற்கூறப்பட்ட சொத்துகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடை எது?
(1) A B C D E (2) A C E D B (3) A E B C D
(4) A E C B D (5) B A C D E

[பக். 8 ஐப் பார்க்க

**32.** குறிப்பிட்ட நபரொருவர் ரூபா. 2400 வணிக வங்கியொன்றில் வைப்பிலிட்டார். சட்டரீதியான ஒதுக்கு வீதம் 20% எனின், இவ் வைப்பை அடிப்படையாகக் கொண்டு வங்கியினால் கடனாக்கம் செய்யக்கூடிய உச்சமட்டத் தொகை,


(1) ரூ. 24 000 ஆகும். (2) ரூ. 14 400 ஆகும். (3) ரூ. 12 000 ஆகும்.
(4) ரூ. 9 600 ஆகும். (5) ரூ. 2 400 ஆகும்.

**33.** பின்வரும் பண்டங்கள் பொதுப்பண்டம், அரைகுறைப் பொதுப்பண்டம் என சரியாக பட்டியல் பட்டியலிடப்பட்டுள்ள விடை எது?

A - வளிமண்டலம் B - பூங்கா C - தேசிய பாதுகாப்பு D - சூழல் பாதுகாப்பு
E - கடற்கரை F - பெருந்தெரு

| | பொதுப்பண்டம் | அரைகுறைப் பொதுப்பண்டம் |
|---|---|---|
| (1) | A, B, C | D, E, F |
| (2) | A, B, E | C, D, F |
| (3) | A, C, D | B, E, F |
| (4) | A, D, E | B, C, F |
| (5) | A, D, F | B, C, E |

**34.** சந்தைத் தொழிற்பாடுகளுடன் வெளிவாரிகளை இணைத்த பின்னரான உத்தம வெளியீட்டு மட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.




மேலே $(Q_2 - Q_1)$ , (A - B) ஆகியவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ளவற்றை சரியாகக் குறிப்பிடும் விடை எது?

| | $(Q_2 - Q_1)$ | (A - B) |
|---|---|---|
| (1) | சந்தையின் குறை நுகர்வு | வெளிவாரி நன்மை |
| (2) | சந்தையின் மிகை நுகர்வு | வெளிவாரி நன்மை |
| (3) | சந்தையின் மிகை உற்பத்தி | வெளிவாரிச் செலவு |
| (4) | சந்தையின் குறை நுகர்வு | வெளிவாரிச் செலவு |
| (5) | சந்தையின் மிகை நுகர்வு | வெளிவாரிச் செலவு |

**35.** குறித்த ஒரு ஆண்டின் அரச வரி வருமான மாற்றத்தின் வருடாந்த விகிதாசாரம் 48% ஆகும். சந்தை விலையில் மெத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த மாறும் வீதம் 60% ஆகும் எனின், இப்பொருளாதாரத்தின் அரச வரி வருமானக் குணகம் என்ன?

(1) 0.08 ஆகும். (2) 0.8 ஆகும். (3) 1.25 ஆகும். (4) 1.5 ஆகும். (5) 8 ஆகும்.

**36.** மீள் சுழற்சி அரச நிதிக் கொள்கையின் கீழ் பொருளாதாரக் கொள்கை வகுப்போர் செயற்பட வேண்டிய விதத்தைக் காட்டும் மிகச்சரியான கூற்று எது?

(1) பொருளாதாரப் பின்னடைவின்போது அரச செலவுகளைக் குறைத்து வரிகளைக் கூட்ட வேண்டும்.
(2) பொருளாதாரப் பின்னடைவின்போது அரச செலவுகளையும் வரிகளையும் அதிகரிக்க வேண்டும்.
(3) பொருளாதார விரிவாக்கத்தின்போது அரச செலவுகளையும் வரிகளையும் குறைக்க வேண்டும்.
(4) பொருளாதார விரிவாக்கத்தின்போது அரச செலவுகளைக் கூட்டி வரிகளைக் குறைக்க வேண்டும்.
(5) பொருளாதாரப் பின்னடைவின்போது அரச செலவுகளைக் கூட்டி வரிகளைக் குறைக்க வேண்டும்.

[பக். 9 ஐப் பார்க்க

**37.** அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் உள்நாட்டு அரச பொதுப்படுகடனில் பெரும்பகுதியைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கடன்மூலம்

(1) திறைசேரி உண்டியல்கள்
(2) இலங்கையின் அபிவிருத்திப் பிணைப்பத்திரங்கள்
(3) ரூபாய்க் கடன்கள்
(4) திறைசேரிப் பிணைப்பத்திரங்கள்
(5) மத்திய வங்கியின் முற்பணங்கள்

**38.** இரு நாடுகளில் ஓர் ஊழியத்தின் செயற்றிறன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பண்டம் | x நாடு | y நாடு |
|---|---|---|
| ஆடை | 10 | 03 |
| கோதுமை | 20 | 12 |

மேற்படி தகவல்களின்படி இரு நாடுகளும் நன்மைபெறும் பரிமாற்று வீதம்

(1) ஆடை 1 = கோதுமை 3
(2) கோதுமை 1 = ஆடை 1.5
(3) கோதுமை 1 = ஆடை 2
(4) ஆடை 1 = கோதுமை 1.5
(5) கோதுமை 1 = ஆடை 3

**39.** இலங்கைச் சந்தையில் விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு சோடிக் காலணியின் விலை ரூ. 500/- ஆகும். எனினும் ரூ. 300/- இற்கான இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளைப் பயன்படுத்தி அது இலங்கையிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே அரசு இறக்குமதி செய்யப்படும் காலணிகளுக்கு 25% வரி அறவிட்டால் செயற்றிறன் வாய்ந்த பாதுகாப்பு வீதம்

(1) 16% ஆகும்.
(2) 40% ஆகும்.
(3) 50% ஆகும்.
(4) 62.5% ஆகும்.
(5) 67.5% ஆகும்.

**40.** ஒரு நாட்டின் 'இறக்குமதியின் கொள்வனவாற்றல்' தங்கியிருக்கக் கூடிய மிக முக்கிய காரணிகள் எவை?

(1) ஏற்றுமதிப் பண்டங்கள் சேவைகளின் அளவும் நாணயமாற்று வீதமும்
(2) ஏற்றுமதிப் பெறுமதியும் அரச கொள்கைகளும்
(3) பண்டங்கள் சேவைகளின் இறக்குமதி அளவும் இறக்குமதி விலையும்
(4) வர்த்தக மீதியும் நாணயமாற்று வீதமும்
(5) அந்நியச் செலாவணி உழைப்பும் இறக்குமதிப் பொருட்கள் சேவைகளின் விலையும்

**41.** வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் 'ஊழியர் இழப்பீடு' சென்மதி நிலுவைக் கணக்கில் பதியப்படுவது,

(1) பண்டங்கள் சேவைகள் கணக்கில் ஆகும்.
(2) வருமானக் கணக்கில் ஆகும்.
(3) வர்த்தகக் கணக்கில் ஆகும்.
(4) நடைமுறை மாற்றல் கணக்கில் ஆகும்.
(5) மூலதன மாற்றல் கணக்கில் ஆகும்.

**42.** நாணய மாற்று வீத மதிப்பிறக்கம், வர்த்தக நிலுவையில் சாதகமான செல்வாக்கினை செலுத்தக் கூடிய ஏற்றுமதி இறக்குமதி நெகிழ்ச்சிகள் முறையே,

(1) 0.5 உம் 0.4 ஆகும் போதாகும்.
(2) 0.6 உம் 0.2 ஆகும் போதாகும்.
(3) 0.2 உம் 0.4 ஆகும் போதாகும்.
(4) 0.7 உம் 0.5 ஆகும் போதாகும்.
(5) 0.3 உம் 0.3 ஆகும் போதாகும்.

**43.** பின்வரும் எத்துறையின் தொடர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியாகக் கொள்ளப்படுகின்றது?

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தி
(2) மொத்தத் தேசிய உற்பத்தி
(3) மெய்த் தேசிய உற்பத்தி
(4) சனத்தொகை வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவிலான மெய்த் தேசிய உற்பத்தி
(5) உச்ச உற்பத்தி ஆற்றல்

**44.** குறிப்பிட்டதொரு பொருளாதாரம் 8% வருடாந்த வளர்ச்சி வேகத்தை அடைய எதிர்பார்ப்பதுடன் அந்நாட்டின் முதலீட்டு வெளியீட்டு விகிதம் 5 எனில், அந்நாடு பேண வேண்டிய முதலீட்டு வீதம்,

(1) 20% ஆகும்.
(2) 30% ஆகும்.
(3) 35% ஆகும்.
(4) 40% ஆகும்.
(5) 50% ஆகும்.

[பக். 10 ஐப் பார்க்க

**45.** இலங்கையின் சனத்தொகை தொடர்பான போக்குகள் பற்றி ஆராயும்போது இயற்கை வளர்ச்சி வீதமும் தேறிய குடிப்பெயர்வு வீதமும் மாற்றமடைந்த விதம் தொடர்பான மிகச்சரியான விடை எது?

| | **இயற்கை வளர்ச்சி வீதம்** | **தேறிய குடிப்பெயர்வு வீதம்** |
|---|---|---|
| (1) | வீழ்ச்சியடைந்துள்ளது. | வீழ்ச்சியடைந்துள்ளது. |
| (2) | வீழ்ச்சியடைந்துள்ளது. | அதிகரித்துள்ளது. |
| (3) | அதிகரித்துள்ளது. | அதிகரித்துள்ளது. |
| (4) | அதிகரித்துள்ளது. | வீழ்ச்சியடைந்துள்ளது. |
| (5) | வீழ்ச்சியடைந்துள்ளது. | பூச்சியமாகவுள்ளது. |

**46.** மானிட அபிவிருத்தியை அளவிடும்போது சிறந்த வாழ்வுநிலைக்குத் தேவையான காரணிகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) தெரிவுச் சுதந்திரம், பாதுகாப்பும் சிறந்த சமூகத் தொடர்பும்
(2) சிறந்த சுகாதார நிலை, சிறந்த வாழ்க்கைக்குத் தேவையானவையும் நல்லாட்சியும்
(3) தெரிவுச் சுதந்திரம், நல்லாட்சியும் பாதுகாப்பும்
(4) சிறந்த சமூகத் தொடர்பு, பாதுகாப்பும் பாதுகாப்பான சூழலும்
(5) பாதுகாப்பான சூழல், நல்லாட்சியும் தெரிவுச் சுதந்திரமும்

**47.** 2009/10 அறிக்கையின்படி இலங்கையில் மிகவும் வறுமை நிலவும் மாவட்டம் எது?

(1) வவுனியா (2) மட்டக்களப்பு (3) பதுளை (4) மொனராகலை (5) முல்லைத்தீவு

**48.** பொருளாதார அபிவிருத்தியை அளவிடும் சுட்டெண்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - ஆள்வீத மொத்தத் தேசிய உற்பத்தி
B - கொள்வனவுச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி
C - சிசு மரண வீதம்
D - பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு

மேலே கூறப்பட்டவற்றுள் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுபவை,

(1) Aயும் Cயும் (2) Aயும் Dயும் (3) B யும் C யும்
(4) Bயும் Dயும் (5) C யும் D யும்

**49.** 2012 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்புச் செய்த துறை

(1) உற்பத்திக் கைத்தொழில் (2) நிர்மாணத் துறை
(3) மொத்த, சில்லறை வியாபாரம் (4) உணவகங்களும் விடுதிகளும்
(5) வங்கிக் காப்புறுதியும் சொத்து விற்பனையும்

**50.** குறிப்பிட்ட ஒரு நாட்டிற்காகத் தயாரிக்கப்பட்ட லோரன்ஸ் வளையி சமவருமானக் கோட்டின் மீது அமைந்து காணப்பட்டால், அந்நாட்டின் கிணிக் குணகம்,

(1) உச்சமாகும். (2) 1.5 ஆகும். (3) 1 ஆகும். (4) 0.5 ஆகும். (5) 0 ஆகும்.

* * *

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

**பொருளியல் II** | **மூன்று மணித்தியாலங்கள்**

**கவனிக்குக:**

★ **ஒரு பகுதியிலிருந்து** குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) "பொருளாதார முறைமைகளை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகளின் அடிப்படையில் மாற்றுப் பொருளாதார முறைகளை இனங்காணலாம்."
நியதிகளையும் பொருளியல் முறைமைகளையும் பெயரிட்டு, மேற்படி கூற்றை நிரூபிக்கவும். (06 புள்ளிகள்)

(ii) மாற்றுப் பொருளாதார முறைமைகளில் உற்பத்திப் பங்கீட்டுப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படுகின்றது என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

(iii) உற்பத்தியில் வினைத்திறனைக் கொண்ட பொருளாதாரமொன்றில் கைத்தொழில் பொருட்களின் உற்பத்திச் செயற்பாட்டின் போது உள்ளீடுகளின் தேவை முன்னரைவிட வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிகழ்வை உற்பத்திச் சாத்திய வளையி ஒன்றின் துணையுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கலப்புப் பொருளாதாரமொன்றின் முக்கிய பண்புகள் யாவை? (03 புள்ளிகள்)

(v) திட்டமிடல் பொருளாதார முறைகளைக் கடைபிடித்த பெரும்பாலான நாடுகள், அப்பொருளாதார முறைமையினால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதனால் அம்முறையைக் கைவிட்டு சந்தை முறைமைக்கு மாறியுள்ளன." இக்கூற்றுக்கு ஆதரவாக முன்வைக்கக் கூடிய வாதங்கள் யாவை? (04 புள்ளிகள்)

2. (i) கேள்வி விதி என்பது யாது? (02 புள்ளிகள்)

(ii) குறித்த பண்டத்தின் விலைக்கும் கேள்வித் தொகைக்குமிடையே நேர்கணியத் தொடர்பு எந்நிலைமைகளில் காணப்படலாம்? (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகளின் மூலம் காட்டப்படும் பண்டங்களின் வகைகளைப் பெயரிடுக.
(அ) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி 1ஐ விடக் குறைவான பண்டங்கள்
(ஆ) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி 1ஐ விடக் கூடிய பண்டங்கள்
(இ) நேர்கணியக் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்ட பண்டங்கள்
(ஈ) எதிர்கணியக் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்ட பண்டங்கள் (04 புள்ளிகள்)

(iv) குறித்த ஒரு பண்டத்தின் சந்தைக் கேள்வி, சந்தை நிரம்பல் சமன்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.
$Q_d = 600 - 10P$
$Q_S = 10P$
இப்பண்டத்திற்கு அரசு ரூ. 50 உத்தரவாத விலையை நிர்ணயிப்பதுடன் மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்யும் கொள்கையைக் கடைபிடிப்பதாகக் கருதுக. இதன்படி கீழே கேட்கப்பட்டுள்ளவற்றைக் கணிக்குக.
(i) சமநிலை விலையும் சமநிலைத் தொகையும் (02 புள்ளிகள்)
(ii) அரசினால் உற்பத்தி மிகை கொள்வனவு செய்யப்படின், நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளர் வருவாயும் (02 புள்ளிகள்)
(iii) நுகர்வோர் மிகையில் ஏற்படும் மாற்றம் (02 புள்ளிகள்)
(iv) உற்பத்தியாளர் மிகையில் ஏற்படும் மாற்றம் (02 புள்ளிகள்)
(v) மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்வதன் மூலம் அரசினால் பொறுப்பேற்க வேண்டிய செலவு (02 புள்ளிகள்)
(vi) அரசு உத்தரவாத விலையை நிர்ணயிப்பதன் மூலம் இழக்கப்படும் சமூக நலச் செலவின் பெறுமானம் (02 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

3. (i) குறுங்கால, நீண்டகால உற்பத்திச் செயற்பாடுகளின்போது உள்ளீடுகளுடன் வெளியீடுகளை ஒப்பிடுவதற்கு அடிப்படையாக அமையும் நிபந்தனைகள் எவை? (04 புள்ளிகள்)

(ii) குறுங்கால சராசரி மாறும் செலவு, நீண்டகால சராசரிச் செலவுத் தொழிற்பாடுகளைக் காரணங்கள் தந்து விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டிச் சந்தை அமைப்பிலும் தனியுரிமை சந்தை அமைப்பிலும் செயற்படும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் கேள்விக் கோடுகளின் தன்மையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டிச் சந்தையில் குறுங்காலத்தினுள் நிறுவனம் எச்சந்தர்ப்பத்தில் சந்தையை விட்டு விலகத் தீர்மானிக்கும்? பொருத்தமான வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(v) தனியுரிமை போட்டிச் சந்தைக்கும் தனியுரிமைச் சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

4. (i) அரசின் நலனோம்பல் சேவைகளின் பெறுமதிகள் தேசிய கணக்குகளில் எவ்வாறு உள்ளடக்கப்படும்? (03 புள்ளிகள்)

(ii) 2013ஆம் ஆண்டின் கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும். எல்லாப் பெறுமானங்களும் பில்லியன் ரூபாய்களில் ஆகும்.

| | |
|---|---|
| மொத்தத் உள்நாட்டு செலவு | 1800 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 1200 |
| வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் | –800 |
| வெளிநாட்டுத் தேறிய நடைமுறை மாற்றல்கள் | 900 |
| மூலதனப் பெறுமானத் தேய்வு | 50 |
| தேறிய நேரில் வரி | 120 |
| நுகர்வுச் செலவு | 600 |
| உள்ளார்ந்த விலைச் சுருக்கி (2002 = 100) | 120 |
| 2012 ஆம் ஆண்டின் மெய்த் தேறிய உள்நாட்டு உற்பத்தி | 900 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

1. தேறிய ஏற்றுமதி (01 புள்ளி)
2. செலவிடத்தக்க தேசிய வருமானம் (01 புள்ளி)
3. உள்நாட்டுச் சேமிப்பு (02 புள்ளிகள்)
4. தேசிய சேமிப்பு (01 புள்ளி)
5. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை (01 புள்ளி)
6. பொருளாதார வளர்ச்சி வீதம் (02 புள்ளிகள்)

(iii) இரட்டைக் கணிப்பீட்டைத் தவிர்த்து, செலவு முறையில் தேசிய வருமானத்தைக் கணிப்பிடும்போது நீக்க வேண்டிய செலவுகள் எவை? (03 புள்ளிகள்)

(iv) மொத்த உள்நாட்டு உற்பத்தியை வருமான வழியில் கணிப்பிட்டாலும் கூட்டப்பட்ட பெறுமதி அடிப்படையில் கணிப்பிட்டாலும் ஒரே பெறுமதியே பெறப்படும். இதனை நீர் ஏற்றுக்கொள்வீரா? விடையை விளக்குக. (03 புள்ளிகள்)

(v) மெய்த் தேசிய உற்பத்திக்கும் மெய்த் தேசிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (03 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

5. (i) எல்லை சேமிப்பு நாட்டம், எல்லை நுகர்வு நாட்டம் ஆகிய எண்ணக்கருக்களை விளக்கி, எளிய பொருளாதாரமொன்றில் இவற்றின் பெறுமதிகளின் மொத்தம் எப்போதும் சமமாகும் என்பதைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(ii) தேசிய வருமானத்தில் சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்பதனால் கருதப்படுவது யாது? இதற்காக மூடிய பொருளாதாரமொன்றில் எந்நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்? (04 புள்ளிகள்)

(iii) வருமான வழி, செலவு வழிகளைப் பயன்படுத்தி, எளிய பொருளாதாரமொன்றின் சமநிலைத் தேசிய வருமானத்தைத் தீர்மானிக்கும் விதத்தை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றின் சேமிப்புச் சார்பு $S = -180 + 0{\cdot}2Yd$ ஆவதுடன் இப்பொருளாதாரத்தின் முதலீடு 120 உம் அரச கொள்வனவுகள் 160 உம் வரி 100 உம் ஆகும்.

(அ) சமநிலை வெளியீட்டு மட்டம் (02 புள்ளிகள்)

(ஆ) வரிப் பெருக்கி, அரச செலவுப் பெருக்கி

ஆகியவற்றைக் கணிக்குக. (02 புள்ளிகள்)

(v) பணவீக்க இடைவெளி (*Inflationary Gap),* வேலையின்மை இடைவெளி (*Unemployment Gap*) ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (04 புள்ளிகள்)

## பகுதி II

6. (i) பணத்தின் தொழிற்பாடுகளைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) 10% சட்டரீதியான ஒதுக்கு வீதத்தின் கீழ் செயற்படும் ஒரு வணிக வங்கியின் மொத்த வைப்புக்கள் 1800 மில்லியன் ரூபாயாகும். ஒதுக்குகள் 200 மில்லியனும் வழங்கப்பட்ட கடன்கள் 1600 மில்லியனும் ஆகும்.

(அ) வங்கியின் மிகை ஒதுக்கின் அளவைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) புதிதாகக் கடன் வழங்கப்பட்ட பின் வங்கியின் ஐந்தொகையைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(இ) கடன்பட்டோரினால் வரையப்பட்ட காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின் வங்கியின் ஐந்தொகையைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) நாணயத் தளத்தின் வகுதிகள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் பணப்பெருக்கி 1 அல்லது 1 இற்குக் கூடிய பெறுமானமாகக் காணப்படுவதற்கான காரணங்களை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) மத்திய வங்கி நாணயக் கொள்கைக் கருவிகளை பரவலாகக் கையாளும் விதத்தை எடுத்துக் காட்டுக. (03 புள்ளிகள்)

(v) செலவுத்தூண்டல் பணவீக்கத்துக்கு ஏதுவான முக்கிய காரணிகளை விளக்குக. (03 புள்ளிகள்)

7. (i) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் அரசினதும் தனியார் துறையினதும் பங்களிப்பு முறை (Public Private Partnership) என்றால் என்ன? அதன் அனுகூலங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(ii) “வரி அறவிடுவதன் முக்கிய குறிக்கோள் வளங்களை ஒன்றிணைத்தலாகும்.” வரி அறவிடுவதன் மூலம் அரசு எதிர்பார்க்கும் ஏனைய குறிக்கோள்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பொருளியல் வகைப்படுத்தலின் படி இலங்கையின் அரச செலவின் பிரதான வகுதிகள் யாவை? (04 புள்ளிகள்)

(iv) குறித்த ஒரு வருடத்தின் அரச வரவு செலவு திட்ட அறிக்கையின் சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. எல்லாப் பெறுமானங்களும் மில்லியன் ரூபாவிலாகும்.

| | |
|---|---|
| அரச வருமானம் | 15000 |
| நடைமுறைச் செலவு | 18500 |
| பொதுப்படுகடன் வட்டி | 500 |
| மூலதனச் செலவுகளும் தேறிய கடன் கொடுப்பனவும் | 7500 |
| வெளிநாட்டு நன்கொடைகள் | 2000 |
| நடைமுறை மாற்றல்கள் | 3000 |

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) நடைமுறைக் கணக்கு மீதி

(ஆ) மொத்த நிலுவை

(இ) ஆரம்பக் கணக்கு மீதி

(ஈ) அரச நுகர்வுச் செலவு (04 புள்ளிகள்)

(v) அரச கடனின் பேண்தகு தன்மை என்றால் என்ன? அதனை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் சுட்டியின் அண்மைக்கால மாற்றங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

8. (i) (அ) சர்வதேச வர்த்தகத்தில் முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (03 புள்ளிகள்)

(ஆ) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைவது எக்கருதுகோள்களாகும்? (02 புள்ளிகள்)

(ii) (அ) சர்வதேச வர்த்தகத்தடைகளை விதிக்கப்படுதலுக்குச் சாதகமாக முன்வைக்கக் கூடிய வாதங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) வரியல்லாத வர்த்தகத்தடைகள் யாவை? (02 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டு நேரடி முதலீடு, பட்டியல்படுத்தப்பட்ட முதலீடுகளை விட முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுவது ஏன்? (04 புள்ளிகள்)

(iv) சென்மதி நிலுவை பற்றாக்குறையொன்று நீண்டகாலமாகக் காணப்படின் அதனை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள் யாவை? (03 புள்ளிகள்)

(v) இலங்கையின் வெளிநாட்டு நிதி மூலத்தில், வெளிநாட்டுக் கடன் தொடர்பாக அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? (04 புள்ளிகள்)

9. (i) (அ) பொருளாதார வளர்ச்சியின் எதிர்கணிய விளைவுகள் யாவை? (03 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார அபிவிருத்தி என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

(ii) "மனித வறுமையின் எதிர்ப்பக்கம் மானிட அபிவிருத்தியாகும்." இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) மானிட அபிவிருத்திச் சுட்டியில் உள்ளடங்கும் முக்கிய **மூன்று** அம்சங்களும் யாவை? (03 புள்ளிகள்)

(ஆ) பல்பரிமாண வறுமைச் சுட்டியைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் பிரதான இழப்புகள் யாவை? (03 புள்ளிகள்)

(iv) இலங்கையில் பிரதேச ரீதியாகக் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்குக் கடந்த தசாப்தத்தில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவை? (03 புள்ளிகள்)

10. (i) இலங்கையின் சமநிலையான பிரதேச அபிவிருத்தியை அளவீடு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்ட சுட்டியைப் பெயரிட்டு, 2011-2012 ஆம் ஆண்டுகளில் அதன் போக்குகளை பரிசீலிக்குக. (03 புள்ளிகள்)

(ii) 'மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு' என்ற பொருளாதாரக் கொள்கையை 2020 வரை நீடித்து, முன்வைக்கப்பட்ட 'தரித்து நிற்காத இலங்கை' (Unstoppable Sri Lanka 2020) என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020 ஆகும் போது அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் பொருளாதார இலக்குகள் யாவை? (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு முன்வைக்கக்கூடிய சிபாரிசுகள் யாவை? (04 புள்ளிகள்)

(iv) புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி நோக்காக வறுமையை முற்றாக இல்லாதொழிக்கும் இலக்கினை இலங்கை எவ்வளவு தூரம் அடைந்துகொண்டுள்ளது என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)

(v) 'திவி நெகும' வேலைத் திட்டத்தின் நோக்கங்களையும் அதன் நிகழ்காலச் செயற்பாடுகளையும் விளக்குக. (06 புள்ளிகள்)

* * *